முற்போக்கு சமுதாயத் தொண்டு செய

நெடிது வாழி!

சோவியத் தளபதி ஸ்டாலினுக்குப் பேரறிஞர் ஷா பாராட்டு!

எழுபதை அண்மிவிட்ட ஏந்தலுக்கு இந்தியப் பிரதமரின் நல்லாசி!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (22-12-49) வெளியீடு (23-12-49) [இதழ் 123

மத்திய ஆசியாவில் பெருமிதம்: மாஸ்கோவில் பேரார்வம்!

தங்களது 70-வது பிறந்த நாள் விழாவன்று பாராட்டு நல்லுரை வழங்கும் பேறு பெற்றமைக்குப் பெருமைப்படுகிறோம். தாங்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்திருந்து முற்போக்கு மனித சமுதாயத்துக்குத் தொண்டாற்ற வேண்டுமென விழைகிறோம்.

—ஜியார்ஜ் பெர்னாட் ஷா

தாங்கள் நெடிது வாழ வேண்டுமென்று எனது சார்பிலும் எனது நாட்டவர் சார்பிலும் உளமார வாழ்த்துகிறேன்.

—பண்டித நேரு.

சோவியத் சோஷலிஸ்டு குடியரசு யூனியன் தளபதி மார்ஷல் ஸ்டாலின் அவர்களின் எழுபதாவது பிறந்த நாள் விழாவையொட்டி உலகப் பேரறிஞர் பெர்னாட் ஷாவும் இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேருவும் அனுப்பி வைத்திருக்கும் வாழ்த்துச் செய்திகளை மேலே தந்துள்ளோம்.

உலகிலேயே ஒப்பற்ற நாடகாசிரியராகத் திகழ்ந்திடும் பெர்னாட்ஷா தனது 92-வது வயதில் 70-வயதுடைய ஸ்டாலினுக்கு அனுப்பி வைத்திருக்கும் மேற்படி பாராட்டு நல்லுரையை லண்டன் கம்யூனிஸ்ட் நாளிதழாகிய 'டெய்லி ஒர்க்கர்' 20-ந் தேதியன்று சிறப்புற வெளியிட்டுள்ளது. பண்டித நேரு தனது வாழ்த்துச் செய்தியை இந்தியில எழுதியனுப்பியிருந்தாராம்.

டிசம்பர் 21-ம் நாள் ஸ்டாலினின் 70-வது பிறந்த நாளாகும். சைகிள்கள், ரேடியோ போன்கள், மோட்டார்கார்கள், ஒயின் புட்டிகள் விலையுயர்ந்த ஆடைவகைகள், இலக்கரி யேந்தும் ஆயுதங்கள் பாராட்டிதழ்கள் இன்ன பிறவற்றைத் தாங்கி ரயில் வண்டிகளும் விமானங்களும் மாஸ்கோ நோக்கிச் சென்று கொண்டிருந்தன செவ்வாயன்று.

ஸ்டாலின் பெயரில், உற்பத்திப் பெருக்கம் தேவையென்பதைச் சித்தரிக்கும் மேற்படி ஆர்ப்பாட்டங்களினூடே உலகெங்கணுமிருந்து கம்யூனிஸ்டு தலைவருக்கு பல் வேறுவகையான அன்புக் காணிக்கைகளும் வந்து குவிந்தன. ரஷ்ய மக்களிடையே வழங்கப் பெற வேண்டுமென்பதே இவ்வன்பளிப்புகள் செலுத்தியோரின் நோக்கமாகும். இவ்வாண்டு உலக முழுதுமுள்ள கம்யூனிஸ்டுகள் தங்கள் தலைவரின 70-வது ஆண்டு பிறந்த நாளன்று செலுத்திய அன்பும் மரியாதையும் ஸ்டாலினைத் துறவியெனக் காட்சியளிக்கத் துணை செய்தன வென்று கூறப்படுகிறது. அதாவது, குரு பீடத்துக்கு சிஷ்ய கோடிகள் செலுத்தும் அன்புக் காணிக்கைகளை யொத்தே காணப்பட்டனவாம் அவை!

நீண்ட நல் வாழ்த்துக் கவிதைகள், தலையங்கப 'பிரளயங்கள்,' பிறந்த நாள் விழா விருந்து வைபவங்கள், மலை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

மதச்சார்பற்ற ஆட்சியில் பஜனைப்பாடல்கள் மகத்துவம்!

——(o)——

அனைத்திந்திய வானொலி நிலையம் ஐந்தேகால் மணி ஒதுக்குகிறது!

'இந்தியன் இன்பர்மேஷன்' (ஆங்கில வெளியீடு). அதனுடைய இந்தி, உருது பதிப்புகள் இன்னபிற சிக்கனத் திட்டத்தின் கீழ் 1949 ஜூலை 1-ந் தேதி முதல் நிறுத்தப்பெற்று விட்டனவென்று மந்திரி திவாகர் மத்திய சட்ட சபையில் டிச, 20-ந் தேதி குறிப்பிட்டார்.

'இந்தியன் இன்பர்மேஷன்' வெளியீடுகளில் அச்சாகி வந்த செய்திகளனைத்தும் இதற்கு முன்பு (வேறு பத்திரிகைகளில்) வெளிவந்தவையே தானென்று தெரியவந்ததென அவர் மேலுங் குறிப்பிட்டார்.

பக்திமார்க்க — பஜனைப் பாடல்களுக்கு நாள்தோறும் அனைத்திந்திய வானொலி நிலையம் ஐந்தேகால் மணி நேரம் ஒதுக்கி வருகிறதென மந்திரி தெரிவித்தார்.

இளைஞர் சமுதாயத்தின் ஒழுக்க முறைகளைப் பாதிக்கும் வகையில் அனைத்திந்திய வானொலி நிலையம் காதல் கீதங்களுக்கு நேரம் ஒதுக்கி வருகிறதா, இல்லையாவென லாலா ராஜ்கனவார் கேட்ட கேள்வியை சபைத் தலைவர் தோழர் மவலங்கர் நிராகரித்து விட்டார்.

நூறாண்டு வாழ வழி...!

லண்டன், டிச. 21—

திருமதி ஜூலியா எக்ஸ்லி என்பவர் சமீபத்தில் தனது 100-வது பிறந்தநாளைக் கொண்டாடியிருக்கிறார். இவர் சிறு பெண்ணாக இருக்கும்போது டாக்டர்கள் ஒரு சிறு அதிர்ச்சி ஏற்பட்டால் கூட உயிர் போய்விடும் என்று எச்சரித்திருந்தார்களாம். இவர் மணந்த மூன்று கணவர்களும் மாண்டுவிட்டனர். எப்பொழுதும் உல்லாசமாக இருப்பதன்மூலமே இவ்வளவு காலம் வாழ முடிகிறது என்று அவர் கூறுகிறாராம்.

—ஏஜன்ஸி.

சிரியப் புரட்சி உள்நாட்டு விவகாரமே

புரட்சித் தலைவர் கூறும் விவரம்

டமாஸ்கஸ், டிச. 21—

சிரியாவில் ஏற்பட்ட புரட்சி அரபியில் எவ்வித மாறுதலும் செய்வதற்காக ஏற்பட்டதில்லை என்றும், அதை அர்த்தப் பொருளில் புரட்சி என்று சொல்லக்கூடாது என்றும் புரட்சித் தலைவர் அதிப் எல் ஷிஷேக்லி ஏஜென்ஸி நிருபரிடம் கூறினார். குடியரசு ஆட்சியே நீடிக்க வேண்டும் என்றும், சிரியா சுதந்திரத்தைத்தான்பலமாக ஆதரிப்பவர் என்றும் அவர் கூறினார்.

இதுவரை தலைவராக இருந்த ஹின்னவி ராணுவம், தேசம், குடியரசு ஆட்சி இவைகளுக்குக் குந்தகம் ஏற்படும் நிலைமையில் நிர்வாகத்தை நடத்தியதற்காக பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார். நிதி மந்திரியாக இருந்த காலிட் எல் அஜாமை, புது மந்திரிசபை அமைக்கும்படி ஸிரியாத் தலைவர் ஹஷீம் எல் அடாஸி கேட்டுக்கொள்வார் என்று தெரிகிறது.

—ஏஜென்ஸி.

கம்யூனிஸ்டு சீனாவை அங்கீகரிப்பதில் இந்தியாவுக்கு அட்டியில்லையாம்

ஆனால் காமன்வெல்த்தோடு கலந்து பேசப்படுகிறதாம்

செஞ்சீனாவை இந்தியா அங்கீகரிக்கப் போவதில் அட்டியில்லையென்றும், தேதிதான் இன்னும் குறிப்பிடப் பெறவில்லை யென்றும் செய்தி யறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அமெரிக்காவிலுஞ் சரி, இந்தியா திரும்பிய பின்னருஞ் சரி, பண்டித நேரு இவ்வண்ணம் அங்கீகாரமளிக்க ஆயத்தமாயிருப்பதாகவே தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளாரென்றும் கூறப்படுகிறது. எனினும், இந்தியா காமன்வெல்த் நாடுகளுடனும், அமெரிக்கா உள்ளிட்ட இதர நாடுகளுடனும் இது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறதென்றும், பெரிதும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு வருகின்றனவென்றும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு வந்துள்ள சீனாவில் இந்திய அரசுப் பிரதிநிதி சர்தார் கே. எம். பணிக்கர், செஞ்சீனாவை அங்கீகரித்து, இந்தியா பிரகடனம் செய்த பின்னரே பீப்பிங்குக்குப் புறப்படுவாரெனத் தெரிகிறது.

கிரீஸ் பொதுத்தேர்தல்

ஏதென்ஸ், டிச 21—

கிரீஸில் சமீபத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. வாக்காளர்களில் 40 சத விகிதத்தினர் யாருக்கு வோட் போடுவர் என்று சொல்ல முடியாதபடி ...நிலை பூர்ணமாக இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இடதுசாரிக்கு 30 சதவிகித வாக்காளர்களின் ஆதரவும் வலதுசாரியினருக்கு 30 சத விகித ஆதரவும் நிச்சயமாக இருக்கிறது. கவிரிமை மெஜாரிட்டியில் வலதுசாரியினரே வெற்றி பெறலாம் என்று கூறப்படுகிறது.

இந்திய அயல்நாட்டுக் கொள்கை யு.எஸ். கொள்கையின் மறுபதிப்புதானாம்

அமெரிக்கா, பிரிட்டன் உதவிகொண்டே இந்தியா தலைதூக்க முடியுமாம்!

நியூயார்க், டிச. 20—

"இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை 'ஒரிஜினல்' யுனைடெட் ஸ்டேட்ஸ் கொள்கையை ஒத்திருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன், கனடாவும் யுனைடெட் ஸ்டேட்ஸும் ஒரு சமரச உடன்பாட்டிற்கு வந்தது போல், இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு ஒத்துழைப்பு ஏற்பாட்டைச் செய்துகொள்ளவேண்டியது அவசியம்" என்று, இந்தியா திரும்பிவிட்டுச் சென்றுள்ள பிரபல பத்திரிகாசிரியர் வால்டர் லிப்மன் "நியூயார்க் ஹெரால்ட் டிரிபூன்" பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா பொருளாதாரத் துறையில் ஓங்க, அமெரிக்கா, பிரிட்டன் உதவிசெய்யவேண்டும் என்பதை வற்புறுத்தி அவர் எழுதி யிருப்பதாவது:

ஆசியாவில் தலைதூக்கியுள்ள இந்தியாவையும் பாகிஸ்தானையும், ராணுவ அம்சங்களில் நாம் கவனிப்பதைவிட அவை பொருளாதார சிக்கல்களிலிருந்து தலைதூக்குவதற்கான உதவிகளை நாம் செய்தாக வேண்டும். அந்நாடுகள் தங்கள் விவகாரங்களை கவனித்துக்கொண்டு தங்கள் சுதந்தரங்களைக் காப்பாற்றிக்கொள்ளவழிசெய்தாகவேண்டும்.

நம் நாடுகள், ஒரு நூற்றாண்டு காலம் இதர நாடுகளின் உதவியால் பாதுகாக்கப்பட்டதுபோல், அவைகளும் பாதுகாக்கப்படவேண்டும். அப்பொழுதுதான், உலகில் சமாதானம் நிலவ வழி ஏற்படும்.

இந்தோ-சீனாவையும் எட்டிப் பார்க்கிறது கம்யூனிசம்!

2-லட்சம் படைகள்! 100-மைல் முன்னேற்றம்!!

சீனக் கம்யூனிஸ்டுகளின் முன்னேற்றம் சீனாவையும் கடந்து, இந்தோ சீனாவை எட்டிப்பிடிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. ஹாங்காங்கிலிருந்து கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. இதோ அச் செய்தி:—

இந்தோ சீன எல்லைப்புறத்திலுள்ள டோங்கிங் என்னும் ஊரை கம்யூனிஸ்டுகள் வசப்படுத்தி விட்டனர். நாங்கிங்குக்கும் டோங்கிங் வளைகுடாவுக்குமிடையே சுமார் 100-மைல் போர் முனையில் 2-லட்சம் கம்யூனிஸ்ட் துருப்புகள் இந்தோ சீன எல்லையை நோக்கி முன்னேறிவருவதாகவும், எல்லைப் புறத்திலுள்ள முக்கிய இடங்களை கம்யூனிஸ்டுகள் கைப்பற்றி விட்டனர் என்று பத்திரிகை செய்தியொன்று கூறுகிறது.

கம்யூனிஸ்ட் துருப்புகள் அமெரிக்க ஆயுதங்களுடனும், யுத்தசாதனங்களுடனும் முன்னேறி வருவதாகவும், இதனால் இந்தோ-சீன எல்லையில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மாலை மணி

சென்னை 22—12—49 வியாழக்கிழமை

திட்டம் திறம்பட நடைபெறட்டும்

மின்சாரத்தை உற்பத்தி செய்து, நாட்டிற்கு வழங்கும் தொழிலகங்களை, இனி அரசாங்கமே ஏற்று நடத்துவது என்ற மசோதாவைச் சென்னை சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது!

மக்களின் பொதுநலத்திற்குப் பயன்படும் தொழில்களை எல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும், அப்பொழுதுதான் மக்களின் தேவையையும் நிறைவேற்ற முடியும், தொழில்களும் ஒழுங்காக வளர்ச்சியடைய ஏதுவாகும் என்ற கருத்து முற்போக்குக் கொள்கையுடைய பலராலும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில்நின்று பார்க்கும்போது, மின்சாரத்தை அரசாங்கத்தின் பொதுச் சொத்தாக ஆக்கும் இந்த மசோதா பாராட்டுதலுக்குரிய தொன்றாகும்.

மனித வாழ்வுக்கு இன்றியமையாதனவாக வேண்டப்படும் தொழில்களெல்லாம் அரசாங்க மயமாக்கப்பட வேண்டும். அப்படி ஆக்கப்பட்டால்தான், மக்களின் பொது உழைப்பு-பொது உற்பத்தி—பொது விநியோகம்-பொது ஆட்சி-பொது இன்பநுகர்வு என்ற பண்புவளரவும், வாழ்க்கையில் மகிழ்ச்சி பிறக்கவும் வழியேற்படும். பொதுத் தொழில்களெல்லாம், அரசாங்கத்தினுடையனவாக ஆக்கப்பட்டாலதான், தனிப்பட்ட முதலாளிகளோ, தனிப்பட்ட ஒரு சிலர் கூடிய நிலையங்களோ கொள்ளைகொள்ளவோ, சுரண்டிவாழவோ வழி கிடைக்காமற் போகும். அந்த முடிவான எண்ணத்திற்கு இப்பொழுது கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கும் மசோதா, ஏறும் படிக்கட்டாக அமைந்திருப்பதாலதான் நாம் பாராட்டுகிறோம் என்கிறோம்.

இது மின்சார காலம்' மக்களின்—நாட்டின் நலத்தையும், வளத்தையும் பெருக்கிவரும் சாதனங்களிலே, மிக முக்கியமானதாக விளங்குவது மின்சாரமாகும்! அப்படிப்பட்ட தன்மை வாய்ந்த மின்சாரத்தின் உற்பத்தி, இத்துணைக் கண்டத்தில் மிக மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. மின்சார உற்பத்தியைப் பெருக்கி, வேண்டும் அளவுக்கு நாடு, நகரங்கள், பட்டிதொட்டிகள் ஆகியவற்றிலெல்லாம் பரப்பவேண்டுமென்றால், பெரு அளவில் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டும். அந்தச் செயலை ஒரு நாட்டின் அரசாங்கந்தான் மிகத் திறம்படச்செய்து காட்ட முடியும்.

மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான நீர்வீழ்ச்சிகளும், நீரோட்டங்களும் இயற்கையிலேயே இந்நாட்டில் ஏராளமாக அமைந்திருந்தும், போதுமான அளவுக்கு அவைகள் பயன்படுத்தப்படவில்லை. அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கத்திற்கு முடியும். அதற்கு இந்த மசோதா உறுதுணையாகவிளங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மக்கள்வாழ்வுக்குத் தேவைப்படும் உடைமைகளை எல்லாம் பெருக்கித் தருவது யந்திர சாதனமேயாகும். வெறும் குடிசைத்தொழில், சதர்நூற்றல் போன்றவைகள், வெறியுணர்ச்சியின் எடுத்துக்காட்டுகளாக வேண்டுமானால் விளங்கலாமே யொழிய, கவைக்குதவும் காரியங்களாக ஒருநாளும் தென்படா. ஆனால் காங்கிரஸ் அரசாங்கம், கூழுக்கும் "ஆசை மீசைக்கும் ஆசை" என்ற பழமொழிக்கிணங்க ஒரு பக்கத்தில் யந்திரத் தொழிலை வளர்க்க விரும்புகிறது! மற்றொரு புறத்தில் குடிசைத் தொழில்களையே வளர்க்க எண்ணுகிறது; இரண்டும் ஒன்றுக்கொன்று பொருந்தி வாராதவை!; இரண்டில் ஒன்றை விட்டு விடவேண்டும்; குடிசைத்தொழில்களை மட்டும் நம்பி வாழமுடியாது; ஆனால் குடிசைத் தொழில்களை விட்டு யந்திரத் தொழிலை மட்டும் ஆதரித்து நின்று வாழ முடியும்; வெற்றியும் பெறமுடியும் எனவேதான், அரசாங்கம் தன் பொருளையும், உழைப்பையும் வீணில் செலவழிக்க முன் வராமல்—பயன் தரும் யந்திரத்தொழில், அதற்காதாரமான மின்சாரம் ஆகியவற்றில் செலவழிக்க முன்வந்தால், நாட்டிற்கும், மக்களுக்கும் எவ்வளவோ நலமுண்டாகும் மின்சார உற்பத்தித் தொழிலகங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டால் மட்டும் போதாது. அவற்றை ஒழுங்கான முறையில் வைத்துக் காப்பாற்றவும், அவற்றை மேன்மேலும் விரிவடையச் செய்யவும் திறன் பெற வேண்டும்.

மின்சாரம் எளிதில், விலை மலிவில் கிடைக்கப் பெறுமானால், எத்துணையோ இலட்சக் கணக்கான காடு கரம்புகள் நஞ்சை, புஞ்சைகளாக மாறியிருக்கும். நீர்பாசனத்திற்கு, மின்சார உதவி தேவைப்படும் இடங்களிலெல்லாம், எளிதில் அதனைக் கொடுப்பதற்கான வசதி ஏற்படின் எத்துணையோ விளைவில்லா நிலங்கள் விளைநிலமாகி, விளைவு மேலும் மேலும் பெருக வாய்ப்பு உண்டாகும். எளிதில்-விலைமலிவில்—ஏராளமான அளவில் மின்சாரத்தைச் சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் வழங்க அரசாங்கம் இம்மசோதாவின் மூலம் முன் வந்தால்தான், மசோதா நிறைவேற்றப்பட்டதால் பலன் ஏற்பட்டதாகக் கருதப்படும்.

மின்சார உற்பத்தித் தொழிலகங்களை எடுத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல், மின்சாரக் கருவிகளைச் செய்யும் தொழிற் சாலைகளையும் அரசாங்கம் நாளடைவில் நிறுவப் போவதாகவும் மந்திரி கூறியுள்ளார். அதுவும் வரவேற்கத் தக்கதுதான். இவற்றையெல்லாம் நீண்ட காலத் திட்டங்களாக வைத்துவிடாமல், உடனடித் திட்டங்களாகப் பாவித்து நடைமுறைக்குக் கொண்டு வந்தால், நாடு குறுகிய காலத்தில் வளர்ச்சிபெற வழி ஏற்படும்.

தேசிய மயமாக்கும் திட்டங்களைத் திறம்பட நடத்திக் காட்டுவதைப் பொறுத்துத்தான், திட்டத்திற்கு மக்கள் தரும் மதிப்பு இருக்க முடியும். திட்டத்தைச் சரிவர நிறைவேற்ருமல், தேசிய மயமாக்கும் தன்மைக்கு இழுக்குத் தேடிவைக்க முதலாளித்வம் எப்பொழுதும் முனைந்து நிற்கும். அதற்கு இடந்தராமல் திட்டத்தை நிறைவேற்றி வைக்க அரசாங்கம் முன்வர வேண்டும். **திட்டம் திறம்பெற நடைபெறட்டும்!**

அறிவுக் கதிர்!

தமிழ் மொழியில் யார் என்ன செய்த போதிலும் கேள்வி முறையில்லை. அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறும் வாய்க்கு வந்தன வந்தவாறும் எழுதுகின்றனர். இவ்வாறு செல்ல விடுதல் கேடே. தமிழிலக்கணமுடையார் முற்புகுந்து இதனைச் சிறிது அடக்கியாள வேண்டும். இக்காலத்துப் பண்டிதர் தமிழும் பாமரர் தமிழும் மிகவும் வேறுபடுகின்றன; இருவேறு பாஷைகளெனத் தோன்றுகின்றன. இவ்விரண்டிற்கும் வேறுபாடு மிகுந்து கொண்டே போமாயின், பண்டிதர் வடமொழியைப் போலப் பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டில் நின்றுவிடும். மற்றும் பாமரர் தமிழோ தெலுங்கு மலையாளங்கள் போல ஒரு வழி மொழியாய் அமைந்துவிடும். ஆதலின், தமிழ் மொழி இவ்வாறு பிரிந்து பிரிந்து வழி மொழிகட்கு இடஞ் செய்து கொண்டு ஒரு நிலைப்பாடெய்திப் பயிற்சி குன்றி ஆரியம் போற் பரவை வழக்கு அழிந்தொழிந்து போதல் விரும்பாத தமிழ்மக்கள் தமது அருமையான பாஷையை வேண்டிய வளவு சீர்திருத்திக்கொள்ள இன்றே புகுதல் வேண்டும். இன்னுங்காலந் தாழ்க்கலாகாது.

—வி. கோ. பரிதிமாற்கலைஞர்

இந்தியாவுடன் ஆஸ்திரேலியா ஒத்துழைப்பு

சிட்னி, டிச. 21—

இந்தியா, பிரிட்டன், நியூஜிலாந்து இதர காமன்வெல்த் நாடுகளுடன் ஆஸ்திரேலியா நெருங்கி ஒத்துழைக்குமென்று ஆஸ்திரேலிய நாட்டு மந்திரி தோழர் ஸ்பெண்டர் கொள்கையை விளக்கி வெளியிட்ட முதல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இவர்கொழும்பில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ள போகிறதாகவும் தெரிவித்திருக்கிறார்.

காமன்வெல்த் மாநாடுகளை ஒவ்வொரு தலைநகரிலும் நடத்தவேண்டு என்று உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முற்போக்கு...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

யத்துணைதீர்மானங்கள் இன்ன தேரஸ்டாலினவர் களின் பிறந்தநாளைச் சிறப்பித்தன.

மத்திய ஆசியாவின் மிக மிக உயரமான குன்றுச் சிகரங்களில் ஏறத்தாழ 40 குன்றுகள்-ஸ்டாலினின் உருவச் சிலைகள் நிறுத்தப்பட்டன. ரஷ்ய விலேயே உயரமான அதாவது, 24890 அடி உயரமுள்ள ஸ்டாலின் குன்றச் சிகரத்திலும் உருவச் சிலையொன்று நிறுத்தப்பட்டது. ரஷ்ய வீரர்கள் மலைக்குன்றங்களைத் தாவிக் கடந்து, மதிப்பிற்குரிய தலைவரின் வெண்கலச் சிலைகளை அங்காங்கு நிறுத்தினராம். மாஸ்கோ வானொலி நிலையமும் சோவியத் செய்தி நிலையமும் ('டாஸ்') இவற்றை பெருமிதத்துடன் வெளியிடுகின்றன.

'எவ்வாண்டுமில்லாத அளவுக்கு இவ்வாண்டு ஸ்டாலினின் பிறந்தநாள் இவ்வளவு தூரம் ஆடம்பரப் படுத்தப்படுவதற்குக் காரணம், சிறப்பாக ஏதுவோ ஒன்று இருக்கிறது' என்பதாக கிராங்ஷா என்ற பிரபல பிரிட்டிஷ் விமர்சகர் கருதுகிறாராம். ஸ்டாலின் தனது பெயரின் செல்வாக்கினாலேயே நெருக்கடிகளை சமாளிக்க முயல்வதற்கு வழி தேடுகிறாரெனக் கூறுகிறார் அவ் விமர்சகர்! பொலிட்பீரோவில் மேலிடத்திலேயே கருத்து வேறுபாடுகள் நேரிட்டிருக்கின்றன வென்று ஸ்டாலின் தன் சர்வாதிகாரத்தைநிறுவிக்கொண்டு இவ்வேறுபாடுகளை விலக்க முயல்கிறரென்றும் அவ் விமர்சகர் அடுக்கிக் கொண்டே போகிறார்!

டோக்லியாடி மாஸ்கோ வருகை

ரோம், டிச 21—

இத்தாலிய கம்யூனிஸ்டு தலைவர்களான டோக்லியாடியும் லீஷிபாவும் ஸ்டாலினுக்கு அளிக்கவேண்டிய பிறந்த தினப் பரிசுகளுடன் மாஸ்கோவுக்குப் புறப்பட்டிருக்கின்றனர்.

தமிழக எல்லை மாநாடு

ஜனவரி முதல்வாரத்தில் நடைபெறும்

கன்னியாகுமரியில் நடைபெறவிருந்த தமிழக எல்லை மாநாடு ஜனவரி முதல் வாரத்தில் கூடுவதென ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்க இசைந்துள்ளார். மாநாட்டுத் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

வீழ்ச்சி நோக்கத்திலும் வீராப்பு!

சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு அங்கீகாரம் அளிப்பது ஐ. நா. வின் கொள்கைக்கே அமைதிக்கே தீங்காகுமென்ற குறிப்பொன்றை, ஆங்காங்குள்ள சர்க்கார்களிடம் சமர்ப்பிக்குமாறு உலகின் பல வேறு நாடுகளிலுமுள்ள தங்கள் அரசுப் பிரதிநிதிகளுக்கு சீன தேசிய சர்க்கார் கட்டளை பிறப்பித்துள்ளதாம்.

விருதுநகரில் 'சந்திரமோகன்' இரண்டு நாள் நடத்த முடிவு

விருதுநகரில் நாடகம் பார்க்க அதிக தோழர்கள் விருப்பமுள்ளவர்களாக இருப்பதால் அனைவருடைய ஆவலையும் நிறைவேற்றும்பொருட்டு

26 & 27—1—49 திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும், சென்ட்ரல் சினிமாவில்,

"சந்திரமோகன்"

நாடகம் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

இரண்டு நாடகங்களிலும்

தோழர் அண்ணாதுரையும், கே. ஆர். ராமசாமியும் நடிப்பார்கள்.

இரண்டு நாடகத்திற்கும் முறையே

ஊ. பு. அ.

சவுந்திர பாண்டியனார்

கே. கே. நீலமேகம்

தலைமை வகிப்பார்கள்

[illegible] அளவுக்கு ஏற்றபடி தான் டிக்கட் கொடுக்க இயலும். எனவே முன் கூட்டியோ நேரிலோ, அல்லது தபால் மூலமோ பணம் செலுத்தி டிக்கட் பெற்றுக்கொள்ளவும்.

டிக்கட் வரிசைப்படி ரூ. 5, 3, 2.

இப்படிக்கு

தி மு. கழகத்தார்

விருதுநகர்.

பணம் செலுத்தி டிக்கட் பெறும் முகவரி:

கே. எஸ். எஸ். அய்யாசாமி,

பொருளாளர் தி. மு. கழகம்

எவரெஸ்ட் சுருட்டு கம்பெனி

விருதுநகர்.

ஜுலூக்கள் மீது பெற்ற வெற்றிச் சின்னம்

ஆப்பிரிக்கர் காங்கிரஸ் தலைவர் கருத்து

கேப்டவுன், டிச. 21—

ஜுலூக்கள்மீது அடைந்த வெற்றியை கொண்டாட பிரிடோரியாவில் ஏற்படுத்தியுள்ள நினைவுச் சின்னம் குன்றி தெரிவிப்பதற்காகவே ஏற்பட்டதென்றும், வெள்ளையர் கருப்பர்களிடையே அமைதி நிலவு வதற்காக ஒரு சாசுவதமான ஞாபகச் சின்னமாக இருப்பதாகும் என்றும் மலான் சர்க்காரின் சுதேசி விவகார இலாகா மந்திரி ஜென்ஸென் கூறியிருப்பதை மறுத்து பனோம்பன்டினில் கூடிய ஆப்பிரிக்கர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"அவருடைய வார்த்தைகளைக் கண்டு நாங்கள் மயங்கிவிடவில்லை. அந்தச் சின்னம் ஒற்றுமைக்கான சின்னம் என்று அவர் கூறுகிறார். எங்களை அவமதிக்கும் சின்னமாகவே நாங்கள் கருதுகிறோம்.

—ரூயிட்டர்.

இத்தாலிய உழவர் கிளர்ச்சி

ரோம், டிச. 21—

இத்தாலிய உழவர்கள் கிளர்ச்சி சார்பில் கம்யூனிஸ்டுகள் தலையிட வேண்டாம் என்று கட்சி உத்தரவிட்டிருந்ததென்று டிகாஸ்பேரியை ஆதரிக்கும் கம்யூனிஸ்டுகள்தான் அதில் சேர்ந்து [illegible] அளித்திருக்க வேண்டும் என்றும் கட்சியின் [illegible] வெளியாகியிருக்கிறது.

நெல் சாகுபடியில் சலியா ஆராய்ச்சி

—(0)—

இரு தமிழர்கள் கண்டறிந்துள்ள அரிய முடிவு

[தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முத்துப்பேட்டையில் வசிபும் தோழர்கள் மா. தருமலிங்கம், கோ. சற்குணம் ஆகிய இரு நண்பர்களும் நெற்பயிர் விளைவைப் பெருக்கிக் காட்டுவதில் தாம் கண்டறிந்த உண்மை ஆராய்ச்சி முடிவுகளைப் புள்ளி விவரங்களோடு கொடுத்துள்ளார்கள். பொதுமக்கள் அவர்கள் கண்டறிந்துள்ள அரிய முடிவுகள் பற்றி ஆலோசனை செய்யும் பொருட்டும், அம்முடிவுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டும், அம்முடிவுகளின் விவரம் கீழே தரப்படுகிறது. மக்கள் படித்துப் பயன் பெறுவார்களாக. (ஆ-ர)]

சென்ற வருடம் அக்டோபர் மாதம் 2-ந் தேதி எங்கள் நாற்றங்காலில் தாளடி நட வேண்டியதற்காக நாற்று பறிக்க ஏற்பாடு செய்திருந்தோம். அன்றைய தினம் எனது தலைவர் மா. தருமலிங்கம் அவர்களும், நானும் நாற்று பறிக்குமிடத்திற்குப்போயிருந்தோம். அந்த நாற்றங்காலின் ஓர் மூலையில் :15 சதுர அங்குலத்திற்கு மூன்று பயிர்கள் மட்டும் சுமார் மூன்று அடி உயரம் முறையே 68, 52, 47, கிளைகளுடன் வளமாக உற்பத்தியாயிருந்ததைப் பார்த்தோம்; ஒரே காலத்தில் தெளிக்கப்பட்ட விதைகளிலிருந்து மேற்கண்ட மூன்று பயிர்கள் அங்கிலேயில் இருக்க பாக்கிநெருக்கமாயிருந்த பயிர்கள் யாவும் ஒரு நெல்லுக்கு ஒரு பயிர் வீதமும், கிளைகள் இல்லாமலும் ஒரு அடி வளர்ச்சியுடன் மட்டும் இருந்தது.

மேற்கண்ட மூன்று பயிர்களைப்போல் பூரா வயலிலும், இந்த மாதிரி பயிர்கள் அதிகக் கிளைகளோடு விதை ஊன்றியே உற்பத்திசெய்துவிடலாமென்று ஓர் முடிவுக்கு வந்தோம்.

பிறகு ஜனவரி மீ 30வ ஒரு சிறிய படி அளவு நெல்லுக்கு, எத்தனை கதிர்கள் தேவையாயிருக்கும் என்பதை ஆராய்ந்ததில், 70 கதிர்கள் தேவையாயிருந்தது. இதைக்கொண்டு பார்க்குமிடத்தில், ஒரு நெல் பயிர் ஊன்றி தூர் சுமார் 35-நல்ல கதிர்கள் உள்ள கிளைகளுடன் உற்பத்தி, செய்யப்பட்டால், சிறிய படிக்கு ½-படி வீதம் கண்டுமுதல் செய்ய முடியும் என்றஎண்ணங்கொண்டோம்.

அதன்படி 144 சதுர அடி கொண்ட ஒரு குழி நிலத்தில் நூறுநெல் விதைகள் ஊன்றி, 50 சிறிய படி அல்லது 1 கலம் நெல் வீதம், 300 குழிகள் கொண்ட ஒரு ஏக்கருக்கு 300 கலம் நெல் கண்டுமுதல் செய்யலாமென நமது சென்னை மாகாண விவசாய டைரக்டருக்கும், தஞ்சை ஜில்லா விவசாய அதிகாரிகளுக்கும் 30—1—49ல் ரிஜிஸ்டர் தபால் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறேன். ஆகையினால் மேற்கண்டபடி எங்களால் யூகிக்கப்பட்ட விவசாயத்தை எங்கள் நிலத்தில் ½-ஏக்கரில்பரீக்ஷார்த்தமாக கீழ்க்கண்ட முறைப்படி செய்திருக்கிறோம்.

1. சுமார் 6 வருஷத்திற்கு முன் காடாகவும், மேடாகவும் கிடந்த நிலத்தை, எங்களால் நஞ்சையாக மாற்றப்பட்ட கருமண் பூமி

2. அவ்விடத்தில் உள்ள எங்கள் நிலம் ஏக்கர் 15-க்கும் இருபோக சாகுபடிக்கும் ஏக்கர் ஒன்றுக்குக்கலம் நூறு வீதம் சாகுபடி செய்து கண்டுமுதல் செய்யப்பட்டு வருகிறது.

3. தை மாதத்தில் இரண்டு உழவும், ஆடி மாதத்தில் விதை போடும் தருணத்தில் மூன்று உழவும், ஆக மொத்தத்தில் 5 உழவு ஓட்டப்பட்டது

4. தற்சமயம் சாகுபடி செய்திருக்கும் அரை ஏக்கருக்கு, இருபது சிறிய வண்டி மடித்த உரம் (எரு) போடப்பட்டது.

5. 12 அடிக்கு ஒரு வாய்க்காலாக கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும், 12 அங்குல அகலத்திலும 3, அங்குல ஆழத்திலும்போடப்பட்டது.

6. 12'x12' ஆக 144 சதுர அடி அடங்கிய நிலப்பரப்பில் 10க்கு 10 (10/10) ஆக நூறு விதைகள் என்னுடையே பொறுக்கி எடுக்கப்பட்டதாயும் நல்ல திடகாத்திரமான தாகவும்ஊறவைக்காமலேயே போடப்பட்டது.

7. நான் போட்ட விதையின் பெயர், கோயம்புத்தூர் 19-ம் நெம்பர். நான் ஏற்கெனவே பரிசோதனை செய்த பயிரும் நெல்லும் கோயம்பத்தூர் 19-ம் நெம்பர்.

8. நான் போட்ட விதைகள் ஒன்றும் பழுதாகமல் யாவும் முளைத்து விட்டன, விதை அரை ஏக்கருக்கும் சிறிய படி இரண்டுதான் (ப. படி 1)

9. விதையை குழிதோண்டி போடாமல், மேற்படி முறையில் பண்படுத்திய பூமியின் மேல் ஒரு விதை வீதம் விதையைப் போட்டு காலில் பெருவிரலால் சுமார் ½ அங்குலஆழம் பூமிக்குள் அழுத்திவிடப்பட்டது.

10. வயலுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சுங்காலத்தில், விதைகள் ஒரே இடம் போய்ச் சேராமல் இருக்கவும், ஒவ்வொரு கட்டத்திற்கும் ஏக காலத்தில் ஒரே சீராக ஈரம் ஏற்படவும் மேற்சொன்ன 5-வது குறிப்பின்படி வாய்க்கால்கள் பிரயோஜனப்பட்டது.

11. நான் ஆடி மீ 10வ (25—7—49) விதை போட்டேன் அன்று இரவே விதைகள் முளைக்கக்கூடிய முறைக்கு தகுந்தாற்போல் மழைபெய்துவிட்டது ஆனால் நான் அன்று தண்ணீர்ப் பாய்ச்சவில்லை. மழை பெய்யாதிருந்தால், தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டியது அவசியம்.

12. விதைபோட்ட ஆறு தினங்கள் சென்று தண்ணீர் பாய்ச்சுவதும் அதை உடனுக்குடன் வடியச் செய்வதும் எனது அன்றுட விளையாட்டு வேலையாயிருந்தது.

13. விதைபோட்ட 12-வது நாளும், 28-வது நாளும் அதிலிருந்த களைகளைஎடுத்துவிடப்பட்டது.

14. 55-ம் நாள் ஒரு விதை ஒன்றுக்கு 40, 50 கிளைகள் வீதம் உள்ள பயிர்கள் ஆகி விட்டது.

16. அதன் பிறகு பச்சை சாணியாக பத்து வண்டி போடப்பட்டது தண்ணீரை வெளிவிடாமல் வயலில் கட்டப்பட்டது.

15 பயிரை சேதப்படுத்திய பூச்சி புழுக்களை இன்றுவரை என்னுடையே நீக்கப்பட்டு வந்தது ஆனால் வெட்டுக்கிளிகளை மாத்திரம் விவசாய ஆபீஸரால் நீக்கப்பட்டது.

17. ஐப்பசி மாதம் 30வ (நவம்பர் 15) 30 பவுண்டு அமோனியா சல்பேட்போடப்பட்டது.

18. இன்று கூடியது பயிர் ஒன்றுக்கு 70 கிளைகளாகவும், குறைந்தது 40 கிளைகளாகவும் திடகாத்திரத்துடன் இருக்கின்றன. இந்தச் சாகுபடியை நேரில் வந்துபார்த்த பொறுப்புள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், மற்றும் பக்கத்து கிராம விவசாயிகளும், நான் செய்த பயிரைப்பார்த்து சந்தோஷப்படுவதுடன், என் திட்டப்படி நெல்காணும் என்ற நம்பிக்கைக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். மேற்கண்ட முறையைக்கண்டு சொன்னவர் எனது தலைவர் மா. தருமலிங்கம் அவர்கள், அவர்களுக்குச் சொந்தமான நிலத்திலேயே நான் இம்முறைகளைக் கையாடி இந்த விவசாயத்தை செய்திருக்கிறேன். இம்முறைபடி இந்த அரை ஏக்கர் நிலத்தைச்சாகுபடி செய்வதற்கு பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்களால் என்னுடைய உழைப்பையும் சேர்த்து ரூ. 54-செலவுகணக்கு, குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையினால் இந்தியா ஸ்பெயின் ஆகிய இந்த இரு தேசத்தின் கூடுதல் கண்டு முதலைவிட, நான் அதிகமான நெல் கண்டுமுதல் செய்து காட்ட முடியுமென திடமாக நம்புகிறேன் இந்த அரை ஏக்கர் நிலத்திலும் சுமார் நூறுகலத்திற்குக் குறையாமல் பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்களை வைத்து கண்டுமுதல் செய்துகாட்டு வேனுகவும்.

'மேழிச்செல்வம் கோழைபடாது'

இப்படிக்கு

கோ. சற்குணம்,

பேட்டை, முத்துப்பேட்டை

குறிப்பு:— ஒரு நெல் விதைக்கு 10 ஆயிரம் நெல்லுக்குக்குறையாமல் உற்பத்தியாயிருக்கின்றன. பட்டணம் படி ஒன்றுக்கு 50 ஆயிரத்திற்கு மேல் நெல் காணும் என்கிறதை நான் கணக்கிட்டு ½ ஏக்கருக்கும் 15 ஆயிரம இடங்களில் நெல் ஊணப்பட்டிருக்கிறது. ½ ஏக்கரில் 15 ஆயிரம் தூரடி இருக்கின்றன. குழி ஒன்றுக்கு 2 முதல் 4 விதைக்குக் குறையாமல் போடப்பட்டன. சில நாட்களுக்குப் பின் தூர், ஒன்றுக்கு ஒருபயிர் வீதம்வைத்துவிட்டு, மீதியானதை அகற்றி விட்டோம் தற்போது சர்க்கார் விவசாய இலாக அதிகாரிகளும், மற்றும் விவசாயத்தில் அநுபவமுள்ள விவசாயிகளும். இங்க ½ ஏக்கருக்கும் சுமார் 120 கலம எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நாங்கள் 150 கலத்திற்குக்குறையாமல் கண்டு முதல் செய்யலாம் என்று புள்ளி போட்டிருக்கிறோம். இதைப் பொது மக்கள் நேரில்பார்வையிட்டு, இம்முறையைப் பயன் படுத்தி கொள்வார்களாக.

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக் குழுக் கூட்டம்

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம், 31—12—49 இரவு 8-மணிக்கு, திருச்சி, கருணாநிதி பார்க் கட்டிடத்தில் நடைபெறும். பொதுக் குழு உறுப்பினர்கள் வரக்கோருகிறேன்.

அண்ணாதுரை,

பொதுச் செயலாளர் தி. மு. கழகம்.

கோவாவில் அடக்குமுறைத் தாண்டவம்

—;0:—

படைபலங்கொண்டு ஜனநாயகம் பறிக்கப்படும் அலங்கோலம்!

ஆவனசெய்ய முன்வருமா இந்திய சர்க்கார்?

பத்திரிகை செய்திகளுக்குத் தடை.

இந்திய யூனியன் அதன் தலைவர்கள் பற்றிய செய்திகள் பிரசுரமாவது தடைசெய்யப்பட்டிருக்கிறது.

இவை கோவில் போர்ச்சுகீசு சர்க்காரால் கடந்த சில காலமாகக் கையாளப்பட்டுவரும் அடக்குமுறைகள்.

இந்திய யூனியனுக்குள் இருந்துகொண்டு அடங்காப்பிடாரிகளாய் ஆர்ப்பாட்டம் செய்யும் அந்நிய ஆட்சிகளில் போர்ச்சுகீசிய ஆட்சியும் ஒன்று. போர்ச்சுகீசியர் தம்முடையதென உரிமை கொண்டாடும் பகுதிகளில் கோவா ஒன்று இது மிகச் சிறியதொரு பகுதி. சுதந்திர நாடாகத் திகழும் இவ்விந்திய உபகண்டத்தின் ஒரு மூலையில், பல்லாயிர மைலுக்கப்பாலிருக்கும் அந்நியர் ஆட்சி அட்டகாசம் புரிவது மிக மிக வருந்தத்தக்கதே. இன்று கோவாவில் நடைபெறும் அடக்குமுறைகள் ஐரோப்பாவைத்தான் புறம்பாணதாகும். ஜனநாயக விரும்பிகள் யாரும் இதைக் கண்டிக்கத்தான் செய்வர்.

மேலும் கோவாவில், கடந்த சில வாரங்களாகப் போர்ச்சுகீசியர் படைபலங்கொண்டு மக்களை அடக்கி ஆள ஆரம்பித்திருக்கின்றனர். போர்ச்சுக்கல்லிலிருந்து மூன்று விமானங்களும், சில விமான எதிர்ப்பும் பீரங்கிகளும் கோவாவிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவாம்

இது மிக மிக வருந்தத்தக்

செய்தி இத்தனை படைபலம் கொண்டு ... சண்டைத்தின் ஒரு பகுதியில் ... ஆதிக்கத்தை நிலைக்கச் செய்வதை இந்திய சர்க்கார் எப்படி ... சகித்துக் கொண்டிருக்கின்றனரோ தெரியவில்லை. எனவே, அவசர அவசியத்தோடு ... முறையில் இவ்விஷயத்தில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டியது இந்திய சர்க்காருடன் ... பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

மேலும் படை எடுப்புக்குத் திட்டமா

மாசேதுங் மாஸ்கோவில் ... மேலும் இந்தோ சீனா, பர்மா ... மூலிய நாடுகளின் மீது படையெடுக்கும் விஷயமாக, ஸ்டாலினுடன் ஆலோசித்து வருவதாக வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

இந்தோ சீனா, பர்மா, மலேயா ... நிலைகளுக்கு இன்னும் ... மாதங்களில் ஆபத்தான நிலை ஏற்படலாம் என்று, வாஷிங்டன் அதிகாரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். — ராய்ட்டர்

துருக்கி இந்தோனேஷியா உறவு

இஸ்தான்புல் டிச. 21 ... இந்தோனேஷியாவின் ... விப் பிரதமர் டாக்டர் ... ஹெ மீ இன்று துருக்கி அதிகாரிகளைக் கண்டு பேசினார். துருக்கி இந்தோனேஷியா ... வுககு அஸ்திவாரம் போட ... தான் வந்ததாகவும், துருக்கி புரட்சியைத் தங்கள் இயக்கத்திற்கு உதாரணமாக இந்தோனேஷியர்கள் மதித்துவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

துருக்கியிலிருந்து இந்தோனேஷிய சீரமைப்புக்காக வல்லுநர்களைப் பெறவும், இந்தோனேஷிய மாணவர்கள் துருக்கியில் கல்வி வசதி பெறவும் இவர் ஏற்பாடு செய்துவிட்டுப் போவார் என்று தெரிகிறது.

ஏகபோகச் சுரண்டலுக்கு ஏற்ற வழி வகுக்கிறார்களா?

:0:

எவ்வகையிலும் முட்டுக்கட்டை கூடாதாம்!

அமெரிக்க முதலாளிகளின் பேராசை

:0:

இந்தியா-அமெரிக்கா வட்டமேஜை மாநாட்டில் கண்ட உண்மைகள்

இந்தியாவில் காணப்படும் அதிகமான வரி விதிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு, டிவிடெண்டுகளைக் குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்கும் நோக்கம், விற்பனை எதிர் வரிகள், தொழிலைச் சொந்த கட்டுப்பாட்டுக்குட்படுத்த சர்க்கார் திட்டமியற்ற உத்தேசித்திருப்பது, தொழிலில் சர்க்கார் கலந்துகொள்வது, தொழிலைத் தேசிய மயமாக்கும் நோக்கம், ஊதிய நிர்ணயம், இலாபத்தில பங்கு அளிக்கும் திட்டங்கள், தொழிலாளர் அட்ஜுடிகேஷன் தீர்ப்புகள், ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகள்.

ஆகிய இவை அனைத்தையும் சுட்டிக்காட்டி, 'இந்த எல்லா வழிகளிலும், எங்களுடைய வர்த்தகம் முன்னேற இயலாத வண்ணம் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றனவே, இங்கிலீஷ்காரர்கள் எப்படி முதலீடு போட்டு இந்தியாவில் வர்த்தகம் செய்ய முடியும்?" என்று அமெரிக்க முதலாளிகள் கேட்கின்றனர்.

இது அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற இந்தியா—அமெரிக்கா வட்டமேஜை மாநாட்டின் மூலம் வெளியாகியுள்ள உண்மை.

இந்தியா அமெரிக்காவுக்கு அடிபணிகிறது; பொருளாதாரத் துறையில் இந்தியாவின் அடிமைத்தனம் இன்னும் நீங்கவில்லை. வர்த்தக உறவு என்ற முறையில், இந்தியா அமெரிக்காவிடம் அடகு வைக்கப்படுகிறது என்றெல்லாம் நாம் அடிக்கடி கூறிவருகிறோம். நமது கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம், அமெரிக்க முதலாளிகள் தமது உள்ளக்கிடக்கை வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டனர்.

ஒரு நாடு முன்னேற பொருளாதாரத் துறையில் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அவற்றை யெல்லாம் வேண்டாமென்கின்றனர் அமெரிக்க முதலாளிகள். சர்க்கார், தொழில்களைத் தேசியமயமாக்கக்கூடாது, தொழிலாளருக்குச் சலுகைகாட்டக்கூடாது. ஊதிய நிர்ணயம், இலாபத்தில் பங்கு ஆகிய கலன்களைத் தொழில் வகுக்கச் செய்[illegible] [illegible] [illegible] இந்தியாவின் [illegible] துறையாக்க கதவுகள் திறந்துவிடப்படவேண்டும், என்றெல்லாம் ஆசைப்பட்டிருக்கின்றனர். ஏன், அப்பொழுதுதான் அமெரிக்க முதலாளிகளும் தட்டுத் தடங்கலின்றி இந்தியாவில் புகுந்து ஏகபோக ஆட்சி

[illegible] நடத்த இடமும்! எப்படி இருக்கிறது வியாயம்!

பொருளாதார ஏகாதிபத்தியத்துக்கு, சுரண்டல் கொள்கைக்கு இந்தியா இடங்கொடுப்பது மட்டும் போதாதாம். அதற்குத் துணை செய்யவும் வேண்டுமாம்.

மகாவிஷ்ணுவைத் தானம் செய்த இம்பலைக் கடவுளைப் பார்த்த [illegible] பெருமான், எனக்கு இன்னல் ஏதும் விளையாதிருக்கத் துணை செய்யும்படியும் கேட்டாராம்! அதுபோலவே, இன்றைய தினம் இந்தியாவை இரையாக்கப் பார்க்கிறது அமெரிக்கா என்று சொன்னால் மிகையாகாது. இங்ஙனம் துணிந்து தங்களுடைய சுரண்டல் வேலைகளுக்குத் துணை புரியும்படி கேட்கும் அளவுக்கு அமெரிக்கா துணிந்து விட்டதென்றால், அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்திய ஆட்சியாளர் இந்தியாவின் பொருளாதார நிலையை உயர்த்த சுயமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருப்பார்களாயின் இத்தகைய நிலை ஏற்பட்டிராது. சுதந்திரமடைந்தநாள் முதல் அடலர் உதவியை நாடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றனரேயன்றி, தொழில்களைத் தேசியமயமாக்கி, நாட்டில் பொருளாதார சமத்துவம் நிலவச் செய்ய வழிகோலினார்களில்லை. இதுபற்றி இடது சாரிகள் அரசியலாரிடம் வற்புறுத்தியபோது இந்திய பிரதமர் நேருவே சொன்னார், "தொழில்களைத் தேசிய மயமாக்குவது கூடாது" என்று.

"தொழில்களை தேசியமாக்கவே கூடாது" என்று அறிவித்துக் கூறுகின்றனர் அமெரிக்க முதலாளிகள் இன்று.

இந்நிலையில் இந்திய சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்கிறோம். அமெரிக்கா மீதுள்ள காதலால் இந்தியாவில் பொருளாதாரம் சமத்துவம் ஏற்படாதிருக்க வழி செய்யப்போகிறார்களா? அல்லது அந்தக் காதலைத் தகர்த்துவிட்டு இந்நாட்டை சுதந்திர நாடாக, அமெரிக்க முதலாளித்துவத்துக்கு அடி பணியாத நாடாகச் செய்யப் போகிறார்களா என்று கேட்கிறோம்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர் 'மாலைமணி'

தூத்துக்குடியில் நாடகங்கள்

o

24—12—49

தோழியர் மூவாலூர் ராமாமிர்தத்தம்மையார் அவர்கள் தலைமையில்

'சந்திரமோகன்'

o

25—12—49

தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் தலைமையில்

"நீதிதேவன் — — மயக்கம்"

ஆசிய இருநாடகங்கள் நடைபெறும்

நடிப்பு: புலவர் K. R. ராமசாமி தோழர் C. N. அண்ணாதுரை மற்றும் பல நடிகர்கள்

o

விவரங்கட்கு:—

இராமலிங்கம், செயலாளர், ந. தி. மு. கழகம், தூத்துக்குடி

நாடகங்களுக்கு நன்கொடையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். பொது விற்பனை கிடையாது.

ஆசியாவின் அமைதிக்கு ஆபத்து?

லண்டன் டிச. 21—

ஆசிய நாடுகளுக்கு பேரழிவு வல்லரசுகளின் உதவியை வற்புறுத்தி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை 'மாஞ்செஸ்டர் கார்டியன்' வெளியிட்டிருக்கிறது. அது எழுதியிருப்பதாவது:—

ஹாங்காங், இந்தோசீனா, பர்மா இவைகள் மீது கம்யூனிஸ்டுகள் படையெடுப்பதால் அமைதிக்கு ஆபத்து ஏற்படலாம். இந்தியா, பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான் இவைகள் தகராறும் போர் மூளலாம். இந்தப் போர் ஏற்பட்டால், ரஷ்யா கைகளைக் கட்டிக்கொண்டு சும்மாயிருக்கும் என்று கூற முடியாது. ஆகவே பிரிட்டன், அமெரிக்கா, டச்சு இம்மூன்றும் அந்த தேசியசர்க்கார்களை பலப்படுத்த என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அவைகளை செய்யவேண்டும்.

இந்தியாவுக்கு ஜெர்மன் எஞ்சினியர்கள்

இந்திய சர்க்காரால் அழைக்கப்பெற்றிருந்த ஜெர்மன் எஞ்சினியர்கள் மூவரும், டிச. 19-ம் தேதியன்று லண்டனிலிருந்து பயணமாகி வந்து சேர்ந்தனர் இந்திய சர்க்கார் விவசாய இலாகாவோடு ஓராண்டு ஒப்பந்தத்தில் வேலை செய்ய வந்துள்ளனர். இந்த எஞ்சினியர்கள் மோட்டார்கள், டிராக்டர்கள் ஆகியவற்றின் உற்பத்தி வேலையில் ஈடுபடுவர்.

★ நாட்டு நடப்பு ★

நக்கீரர் நூல் நிலையம்

சென்னை, டிச. 15

சென்னை சோலைநகரின் கண் நக்கீரர் நூல்நிலையம் என்ற பெயரில் ஒரு நூல்நிலையம் சிறப்புப்பெற்றது அதற்கு செயற்குழுவினரைத் தேர்ந்தெடுக்க, 11—12—49 அன்று அங்கத்தினர்களின் கூட்டம் சோலை பவனத்தில் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினர் பின்வருமாறு:—

தோழர்கள் சோ.ச. நம்புலிங்கம், க. சீனிவாசராவ், க. சேதுராமன், பி. வெங்கடேசன், சுப்ரமணியம், சங்கரனம், ராமன் ஆகியோர் ஆவர்.

இந்நூல் நிலையத்தின் நோக்கம், மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் எழுச்சியுறச் செய்வதேயாகும்.

* * *

வ. உ. சி. நினைவு நாள்

சத்தியவேடு, டிச. 10—

இவ்வூர் உயர்நிலைப்பள்ளி மாணவர் மன்ற சார்பில் இப்பள்ளி ஓவிய ஆசிரியர் க. செயரத்தினம் அவர்கள் தீட்டிய வ. உ. சிதம்பரனாரின் படத்தைத் திறந்து அன்னாரின் நினைவு நாளை 8—12—49-ல் கொண்டாடினார்கள். செங்கற்பட்டு மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவர் தோழர் இராமசாமி அவர்கள் படத்தைத் திறந்து வைத்தார். தமிழாசிரியர் வ. உ. சி.-யின் வரலாறு கூறினார்.

அவ்வமயம், தலைவர், தமிழ்—தெலுங்கு பிரிவினை கொள்ளக்கூடாது என்பதைக் கூறிவிட்டு, வ. உ. சி. தமிழைக் கற்று அறிந்தவரென்றும், நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு தன் உயிரையே நீத்தவரென்றும் விளக்கி, அவர் புகழ் மேலும் பரவ வேண்டுமென நவின்று தன்னுரையை முடித்துக் கொண்டார்.

தமிழ் வாழ்த்தோடு கூட்டம் முடிந்தது.

* * *

திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம்

பொள்ளாச்சி டிச 18—

11-12-49 ல் திராவிட முன்னேற்ற வாலிபர் கழகத்தின் செயற்குழு, தோழர் அ. ச. பாலு தலைமையில் கூடியது. அதுபோது தோழர்கள் இரா. தனகோபாலன், எம். கே. பாலு, நாச்சிமுத்து, ரங்கசாமி, தர்மராசன் ஆகியோரை செயற்குழு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுவதென்றும், வி. உறுப்பினர் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு, தோழர் பெ. ச. உசேன் விளம்பர உறுப்பினராகவும், கோ. கோபால் பயிற்சியாளராகவும் தேர்ந்தெடுக்கிறதெனவும், 25 12-49 ல் தோழர் மு. கருணாநிதி ஒப்புக்கொண்டுள்ள பொதுக்கூட்டத்திற்கு, தோழர் கோ. கோபால் தலைமை வகிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும், கழக ரசீது புத்தகம், லெட்டர்பேட், சார்டு, கவர் அச்சிடவும், அதற்கானத் தொகையைச் செலவிடவும் செயலாளருக்கு அதிகாரமளிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

* * *

திருக்குறள் மன்றத் திறப்பு விழா

திண்டுக்கல், டிச. 12—

11-12-49- காலை 10 மணிக்கு பாலகிருஷ்ணாபுரம் புதூர் ஆரம்பப் பள்ளியில் தமிழறிஞர் கிருஷ்ணானந்த அவர்கள் தலைமையில் 'திருக்குறள் மன்றம்' திறப்புவிழா நடைபெற்றது. அவ்வமயம் பெரியகுளம் போர்டு உயர்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர் வித்வான் வி. வேலகொழுந்து, அவர்கள் திருக்குறளின் சிறப்பினைக் கூறி 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில் முதல் 4 குறள்களுக்கு விளக்கம் கூறினார்கள்.

ஒவ்வொரு ஞாயிறும் காலை 10 மணி முதல் 11 மணிவரை இப்பள்ளியில் திருக்குறள் வகுப்பைத் தொடர்ந்து நடத்த தமிழாசிரியர் புலவர் சீ. [illegible] அவர்கள் [illegible] தன்னார்கள்.

இம்மன்றத்திற்கு தோழர் பிச்சாண்டி தலைவராகவும், தோழர் முத்துகிருஷ்ணன் செயலாளராகவும், தோழர் சிவசண்முகம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் முடிவுரையில், மன்றத்தின் சிறப்பைப்பற்றி விரிவாகப் பேசினார். நன்றி கூறலுக்குப்பின் விழா இனிது முடிவுற்றது.

* * *

அர்ச்சுனன் நாடக மன்றம்

முத்துப்பேட்டை, டிச. 15—

13—12—49 இரவு 9-மணி யளவில் முத்துப்பேட்டை என். கே. சாமி கெஸ்ட் அவுஸில் தோழர் க. ச. சிங்காரவேலர் (இராமலிங்க அச்சக உரிமையாளர்) அவர்கள் தலைமையில் டை அர்ச்சுனன் நாடக மன்றம், அமைக்கப்பட்டு கீழ்க்கண்ட எழுவரையும் நாடக அமைப்புக் குழுவினராகத் தெரிந்தெடுக்கப்பட்டது.

க. ச. சிங்காரவேலர், கா. குப்புச்சாமி, வ. இராமனுஜன் (தி. மு. க. பொருளாளர்) சி. இராமனுஜம் (தி. மு. க. துணைச் செயலாளர்) என். எச். முகைதீன், அரு மு. கணபதி (தி. மு. க. செயலாளர்) க. தருமலிங்கம் (தி. மு. க. விளம்பர உறுப்பினர்)

* * *

திராவிட வாலிபர் முன்னேற்றக் கழகம்

கணியூர், டிச. 18—

இவ்வூர் திராவிட வாலிபர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் ராமசாமி அவர்கள் கட்டிடத்தில் கூடியது. தோழர் தங்கமுத்து அவர்கள் தலைமை வகித்தார். பல தோழர்கள், வாலிபர்கள் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டிய அவசியம் பற்றியும், முறை பற்றியும் பேசினர். பின் திராவிட வாலிபர் முன்னேற்றக்கழகம் நிறுவப்பட்டு கீழ்காணும் உறுப்பினர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—வி. சுப்பிரமணியம்; உதவிச் செயலாளர்:—எம். ராமசாமி; பொருளாளர்:—வி. மஜீத்; விளம்பர உறுப்பினர்:—எம். சொக்கலிங்கம்; ஏனைய உறுப்பினர்கள்:—தங்கமுத்து, கே. ராமசாமி, மாணிக்கம், கருப்பணன், செங்கமலை, மாலிக், வேலுச்சாமி, அப்துல் காதர், பொன்னன், நாராயணசாமி, வெள்ளைச்சாமி.

* * *

மாணவர் மன்றம்

குத்தாலம், டிச. 18—

இவ்வூர் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியின் மாணவர்மன்றத்தின் சார்பில் 9-12-49 வெள்ளியன்று ஷேக்ஸ்பியர் இயற்றிய மிட்ஸ் ஸம்மர் நைட்ஸ் என்ற ஆங்கில நாடகமும், டை பள்ளி மாணவர் தோழர் கோ. பட்டு அவர்களால் எழுதப்பட்ட "சமதர்மம்" என்ற தமிழ் நாடகமும் நடைபெற்றது. தோழர் பட்டு 5 படிவம் அவர்களே முக்கிய நடிப்பை ஏற்றுத் திறம்பட நடித்தார். ஏனைய மாணவர்களும் நன்கு நடித்தனர். நாடகத்திற்குத் தலைமை வகித்த தோழர் சுப்பாரெட்டி பி.ஏ. அவர்கள் பேசுகையில் நாங்கள் படிக்கும்போது சரித்திரக்கதைகள், புராணக் கதைகள் முதலானவற்றை ஆசிரியர்கள் நாடகமாக அமைத்துக் கொடுப்பார்கள் நாங்கள் அவற்றை நடிப்போம். ஆனால் ஒரு மாணவரால் எழுதப்பட்ட சமூக நாடகம் மாணவர்களால் நடிக்கப்பட்டதைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகிறேன் எனக் குறிப்பிட்டார். பின்பு தோழர் கே. எஸ். ஆனந்த தோழர் பட்டு அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாராட்டளித்தார். அன்றைய தினம் அவரைப் பரிசாக அளித்தனர்.

சினிமா தணிக்கை கத்தரிக்கோலும் வடநாட்டார் கையில் தானா?

—————(0)—————

தென்னாட்டான் கண் மூடியிடுக்கும் வரை, வடநாட்டான் கயிறு திரித்துக் கொண்டுதானே இருப்பான்?

—————(0)—————

குளத்தூர் தி. மு. கழகத் துவக்க விழாவில் சித்தையன், கருணாநிதி

குளத்தூர், டிச. 19—

மேட்டூரையடுத்து 7 மைல் தொலைவிலுள்ள குளத்தூர் என்னும் கிராமத்தில், 18-12-49 ஞாயிறன்று மாலை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா, அதி விமரிசையாக கொண்டாடப் பெற்றது. குளத்தூரில் இதுவரையில் திராவிடர் இயக்கக் கூட்டங்களே நடைபெற்றதில்லையாதலால், காங்கிரஸ்காரர்களின் ஏகபோக ஆதிக்கத்துக்குக் கட்டுண்டு கிடந்த குளத்தூரில், திராவிட இனமறுமலர்ச்சி ஏற்படுவது கண்ட காங்கிரஸ் தோழர்கள் திகில் கொண்டு, கூட்டம் ஏற்பாடு செய்திருந்த இடத்தில், கூட்டம் போடாதவாறு பல இடையூறுகள் விளைவித்தனர். வீண் மோதுதல் வேண்டாமென்று வேறொரு மைதானத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. மேட்டூர் முதலிய பல ஊர்களிலுமிருந்தும் பல நூற்றுக்கணக்கான வெளியூர்த் தோழர்கள் வந்து குழுமியவண்ணமிருந்தனர். ஊரே ஒரு புதிய பரபரப்பைப் பெற்று விளங்கியது. மாலையில் புறப்பட்ட மாபெரும் ஊர்வலம் வாழ்க்கொலிகள் வானை கிழிக்க ஊரின் பல முக்கிய தெருக்கள் வழியாகச் சென்றது. சுமார் 7 மணிக்குக் கூட்டம் துவக்கப்பட்டது. திராவிட நாட்டுப் பண்பாடப்பட்டு, தோழர் கே. பி. நரசிம்மன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமையேற்றார். ஆயிரக் கணக்கான மக்கள் மைதானம் நிறையக் கூடியிருந்து ஆர்வத்தோடு கூட்டத்தைக் கவனித்தனர்.

ஏ. சித்தையன்

தோழர் ஏ. சித்தையன் அவர்கள், இருவண்ணக் கொடியை ஏற்றிவைத்து திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விளக்கிப்பேசி, இன்றைய அரசாங்கத்தின் தவறான போக்குகளையும் சுட்டிக் காட்டி நீண்ட சொற்பொழிவாற்றினார். அவர்பேச்சில், "இன்று சில காங்கிரஸ் தோழர்கள் எங்கள் கூட்டம் நடக்காமல் போக முயற்சி செய்தனர். ஜனநாயகம், பேச்சுரிமை யெல்லாம் என்று பேசுகிற காங்கிரஸ் நண்பர்கள், மாற்றுக் கட்சியினர் பேச உரிமை அளிக்க மறுப்பது ஏனோ? நீங்களும் பேசுங்கள். எங்களையும் பேசவிடுங்கள்—பொது மக்கள் முடிவு கூறட்டும், அதுதான் மனித உரிமைக்குப் போராடுபவருக்கு அழகு" என்று குறிப்பிட்டார். மேலும் பேசுகையில், மேட்டூரிலிருந்து குளத்தூர் வருவதற்கு ஒரு நல்ல பாதை கிடையாதென்றும், நாங்கள் வரும்போது குதிரை வண்டியிருந்தும்கூட நாலைந்து மைல்கள் இறங்கி நடக்க வேண்டி நேரிட்டது என்றும்,

இதையெல்லாம் சீர்படுத்த வேண்டுமென்ற கவலை காங்கிரஸ் ஆளவந்தாருக்கு இல்லை—அவர்களின் பக்தர்களுக்குமில்லை என்றும் அந்தப் பாதையை செப்பனிட இனிமேலாவது இந்த வட்டாரத்து ஜில்லா போர்டு உறுப்பினர் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அடுத்தபடியாக மேட்டூர் தோழர் நெடுஞ்செழியன் என்பவர் சிறிது நேரம் பேசினார்.

மு. கருணாநிதி

கடைசியாகத் தோழர் மு. கருணாநிதி அவர்கள் திராவிட முன்னேற்றக்கழகம் சமுதாயம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பிரச்சினைகளில் எந்த அளவு பங்கு கொண்டு வேலை செய்கிற தென்பதை விரித்துரைத்தார். ஏழைகளின் ஸ்தாபனம் என்று கூறிக்கொண்டிருந்த காங்கிரஸ், லட்சக்கணக்கான ரூபாய்களை ஆடம்பர செலவுகளுக்காக வாரியிறைப்பதுடன், மாகாணத்துக்கு பெயர்மாற்றுவதா? கூடாதா? என்று விவாதித்து இறுதியில் முடிவுக்கு வராத ஒரு பிரச்சினைக்கு ஒரு மணி நேர விவாதச் செலவு 6000 ரூபாய் என்றால், நம்முடைய பணமெல்லாம் விழலுக்கு இறைக்கப்படும் நீராகத்தானே போகிறது?

வரப்போகும் புதிய அரசியலமைப்பின்படி நம்முடைய திராவிடத்தின் நிலைமை இன்னும் கேவலமாகப் போகிறது. அரசியல் சம்பந்தப்பட்ட பதங்கள் கூட இந்தி மொழியிலே மாற்றப்பட ஆராய்ச்சி நடக்கிறது. காங்கிரஸ் ஏடான தினசரிப் பத்திரிகையே இதைக் கண்டிக்கிற அளவுக்கு வட ஏகாதிபத்யம் வளருகிறது: வரப்போகும் புதிய கரன்சி நோட்டுகளிலேகூட இந்தியும் ஆங்கிலமும்தான் இருக்கும். வெள்ளைக்காரன் காலத்திலே தமிழுக்குத் தரப்பட்ட மதிப்புகூட, வடநாட்டுக்காரர் ஆட்சியில் நமக்குக் கிடையாது. வெள்ளையன வெளியிட்ட கரன்சி நோட்டுகளிலே இருக்கும் தமிழ்—நமது சர்க்கார் என்று நாமாவளி பாடுகிறோமே—அவர்கள் ஆட்சியிலே அழிக்கப்படுவானேன்.

தென்னாட்டவரிடம் சிறந்து விளங்கும் சினிமாத் தொழிலைக் கூட, சிதைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு—தமிழ்ப்பட தணிக்கை போர்டையும், வடநாட்டில் அமைக்க திட்டம் போடுகிறார்கள். அவர்கள் கையில் அந்தக் கத்தரிக்கோலும் ஏறினால், தென்னாட்டுசினிமாத்தொழில் ஒழிந்தது போலத்தான்! தென்னாட்டான் கண்மூடியிருக்கும்வரை, வடநாட்டான் கயிறு திரித்துக் கொண்டுதானே இருப்பான்?

மேலும் அவர் பேசுகையில் தளபதி அண்ணா அவர்களின் தலைமையில் துவக்கப்பட இருக்கும் நமது இன உரிமைப் போருக்கு எல்லாக் கட்சித் தோழர்களும் தாங்கள் திராவிடர் என்பதை உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழக முன்னணிப்படையில் சேர்ந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சுமார் இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

குண்டர்களின் குறும்பு

தோழர் கருணாநிதி அவர்கள் பேசி முடித்த பிறகு, ஒரு கேள்வித்தாளைக் கொடுத்த சில காங்கிரஸ்காரர்கள் குழப்பம் செய்ய முயற்சித்தனர். தோழர் சித்தையன் அவர்கள் கேள்விகளுக்கு ஆணித்தரமாகப் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சிலர் மேடையருகே வந்து கூச்சல் போட்டனர். 'ஒழுங்காக அமைதியோடு நடந்த உணர்ச்சி மிக்க கூட்டத்தைக் கண்டு பொறுமைப்பட்டு, வீண் குழப்பம் செய்வது வெட்கக்கேடான செயல்" என்பதை தோழர் சித்தையன் விளக்கி, கேள்விகளுக்கு விரிவாக பதில் சொல்லி முடித்தார். பதிலைக் கேட்டுப் பொதுமக்கள் பலத்த கரகோஷம் செய்தனர். நன்றி கூறுவதற்கு முன்னர் மீண்டும் அந்தத் தோழர்கள் மேடைப்பக்கம் வந்து கூச்சல் போட ஆரம்பித்தனர். நாங்களும் மேடையேறிப் பேசுவோம் என்று கத்தினர். பின் தோழர் கருணாநிதி எழுந்து, "இன்றைய நாகரீக உலகம் உங்கள் செயலை ஆதரிக்காது. கேள்விகளுக்கோ, கல்லடிகளுக்கோ, அல்லது உயிர் போவதற்கோ நாங்கள் பயப்படுகிறவர்கள் அல்ல. உங்களுக்கு மேடை தேவையென்றால், இன்று நாங்கள் பேசிய மைதானத்தைக் குறித்தது, நாளை உங்கள் மேடையில பேசுங்கள். அதுவும் கூடாதென்றால், ஒரு பொதுவான தலைவரின் முன்னிலையில் ஒரு காங்கிரஸ் தலைவரையும் எங்களில் ஒருவரையும் சொற்போர் நடத்த தேதி குறிப்பிடுங்கள் அதுதான் ஆண்மை" என்று குறிப்பிட்டார். பொதுமக்கள் கலகக்காரர்களை அடக்க ஆரம்பித்துவிட்டார்கள். பொதுமக்களின் ஆர்வத்தின் முன்னே கலகக்காரர்கள் வாய் பேசாது திரும்ப நேரிட்டது. பின் செயலாளர் தோழர் சே. குருசாமி அவர்கள் நன்றி கூற, இரவு 10 மணிக்கு கூட்டம் அமைதியாகவும் உற்சாகத்தோடும், வெற்றிக்களிப்போடும் முடிவுற்றது. பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நேர்மையையும் உறுதியையும் பாராட்டினர்.

(வி-உ)

பெயரிடல்

சொண்டலாம்பட்டி, டிச. 10—

சேலம் தாலுகா சொண்டலாம்பட்டியில் தி. மு. க. தோழர் கே. என். அமிர்தம் அவர்களுக்கும், தோழியர் குஞ்சம்மாள் அம்மைக்கும் பிறந்த ஆண் குழந்தைக்கு "அன்பழகன்" எனப் பெயரிடப்பட்டது. [இதன் சின்னமாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி!

ஆ-ர்

போகிற போக்கில்...!

'உலகம் வேகமாக மாறி வருகிறது. அதற்கு நம் மனமும் தயாராக வேண்டும். இல்லையானல் முன்னேற்ற அடையமுடியாது'

—பண்டித நேரு

உலகத்திலுள்ள 'மிலேச்ச' நாடுகள் வேகமாக மாறினால் நம் பாரத புண்ணிய பூமியும் மாறவேண்டியது கட்டாயமா, என்ன, என்று கடாவுகிறார் கலியுக கிருஷ்ணபரமாத்மா! லௌகிகத்திலே புரண்டு ரத்தை மறந்தபாபாத்மாக்கள் முன்னேறுகின்றவென்பதற்காக, நம்முடைய பழைய சாஸ்திர சம்பிரதாயங்களை அலட்சியப்படுத்திவிட்டு அழிவைத் தேடிக்கொள்வதா வென்று அடித்துக் கேட்கிறார் அல்லாடியார்!

* * *

ஆசிரியர்கள் தேசத்தின் எதிர்காலத்தை நிர்மாணிப்பவர்களேயன்றி, கூலிவேலைக்காரர்களல்லர். அவர்கள் அந்தஸ்து உயரும்படி செய்யவேண்டும்'

—டாக்டர் லட்சமணசாமி

பல்கலைக் கழகத் துணைவேந்தரின் இப்பிரகடனத்தையொட்டி, ஆசிரியர்களின், குறிப்பாக, தமிழாசிரியர்களின் தற்போதைய சம்பள சரிபாதியாகக் குறைக்கப்பட்டு அவர்களுடைய அர்தஸ்து மட்டும் (மாணவர்களிடையே!) உயர்த்தி முட்டு கொடுக்கப்படுமென்ற 'மூணு மூணு புள்' கல்வி மந்திரி காரியாலயத்தைச் சுற்றிக் கேட்கின்றனவாம்!

* * *

'மக்களை ஏய்த்துப் பிழைக்கவே சிலர் மிருக பலிகளை நடத்துகின்றனர். இறைவன் சந்நிதானங்களை இத்தகைய பாவச் செயலால் களங்கப் படுத்தக்கூடாது

—ஆர். வி. சாமிநாதன்

டஜன் கணக்கில் மலை வாழைப்பழங்களைப்பிசைந்து, மணுக்கணக்கில் சர்க்கரை கலந்து பஞ்சாமிர்தம் தயாரித்து, சுவாமிமேல்பூசிமெழுகி அபிஷேகம் செய்து, செவ்விளநீர் இரண்டு மூன்றுகுடங்கள் கொண்டுவந்து, அதையும் அதன் மேல் கொட்டி, நல்ல பன்னீராக வாங்கிவந்து குளிப்பாட்டி, தேங்காய்கள் பல வுடைத்து, சாம்பிராணி தூபதீபம்போட்டு, புகை மண்டலமாக்கி, சூடக் கட்டிகளைக் கொளுத்தி 'ஜகஜோதி'யாக்கி, இறைவன் சந்நிதானத்தைப் புனிதமாக்கக் கூடிய—அதன் வழி மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகக் கூடிய—எளிய வழியிருக்க, வாயில்லா ஜீவன்களை வதைப்பதேனோ பாவம்

* * *

'ஸந்தியாவந்தன மந்திரங்களையும், அனுஷ்டான முறைகளையும் நன்கு விளக்கி, எளிதில் ஓதும் நூலொன்று இலவசமாய் விநியோகிக்கப்படுகிறது."

—சுயமித்ரன்

சமிகளே, இதுதான் சரியான காரியம்! பகல் பூரா பாபகன்மங்களில் ஈடுபடும் பேலியாத்மாக்களைக் கடைத்தேற்ற தங்கள் மேற்கொண்ட சத்காரியம் சாஸ்திரோக்தமானது! பாபிகள் நிறைந்துவிட்டனர்; லௌகிகம் தழைத்துவிட்டது! தங்களைப் போன்று இரண்டொருவரிருந்தால் இறைவனுக்கும் நமக்கும் டெலிபோன், டெலிகிராப் தொடர்பில்லாவிட்டாலும், ஏதோ, கம்பியில்லாத்தொடர்பாவது இருந்துவரும். ஆனால் ஒரு விஷயம், தாங்கள் இப்போது வெளியிட்டிருக்கும் 'ஸந்தியாவந்தனம்' நூல் வீட்டிலும், குளக்கரையிலும் அனுஷ்டானம் செய்வதற்கு மட்டும்தான் விதி முறைகள் அடங்கியிருக்கும்! சாயுங்கால வேளைகளில் எல்லோரும் வீட்டிலேயும், வேலையில்லாமலும் இருக்கமாட்டார்களல்லவா? எனவே, இன்னும் சில நூல்கள் தங்கள் திருக்கையால் 'திரு' எழுத 'திரு'ப்பட 'திரு' வேண்டியது 'திரு' அவசியமாகும்! செகரடேரியட்டில் ஸந்தியா வந்தனம், 'ஆடிட் ஆபீஸில் ஸந்தியா வந்தனம்' சர்க்கார் பஸ்களில் ஸந்தியா வந்தனம்', 'டிராம் வண்டிகளில் ஸந்தியா வந்தனம்', சினிமாக்கொட்டகையில் ஸந்தியா வந்தனம்'

'ரயில்வே பிளாட்பாரத்தில் ஸந்தியாவந்தனம்', 'தர்பார் ஹோட்டலில் ஸந்தியாவந்தனம்', 'பீசுக்குப் போகையில் ஸந்தியா வந்தனம்' என்பதாகச் சிறு சிறு நூல்களாக வெளியிடுவீர்களாயின்சத்காரியத்தை சரியாகச்செய்ததாகவுமிருக்கும்; பாபாத்மாக்கள் குறைந்த பட்சம் 90 சதவிகிதமாவது புண்யாத் மாக்களாக ஆக வழியேற்படும், எல்லாவற்றிலும் மேலாக இறைவன் திருவடித்தாமரைகளும் எந்த வெப்பத்திலும் வாடாது வதங்காது என்று பூத்தது போலவே இருக்கும். இறைவனின் இந்த அம்சம் பற்றி ஐயுறுவோர் மாயா ஜாலக கண்ணாடியை வி. பி.-யில் வர வழைத்து, அதன் மூலம் பார்த்து சிந்தை தெளிந்துகொள்க!

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

23—12—49

நாகர்கோவில் :— டி. கே. சீனிவாசன்.

24—12—49

பெரம்பூர்:—(சென்னை) இரா. நெடுஞ்செழியன், இரெ. இளம்வழுதி, காஞ்சி மணிமொழியார்

கொமரலிங்கம் :— சி. பி. சிற்றரசு.

அழகனுபுரம் (நாஞ்சில்) :— டி. கே. சீனிவாசன்.

தேசியமயமாக்கும் திருப்பணியில் சுடுபடமாட்டோம்

தேசிய சர்க்காரின் அமைச்சர் கூறும் உறுதிமொழி

——:(0):——

மின்சார சப்ளை கம்பெனிகள் மசோதா பற்றிய விவாதத்தில் தோழர் பக்தவத்சலம் பேச்சு

சர்க்கார் எல்லாவற்றையு தேசியமயமாக்கும் பணியில் இறங்கிவிட்டது என்று கூறப்பட்டது. அவ்விதம் இல்லை பொது உபயோகக் கம்பெனிகள் அல்லது ஸ்தாபனங்கள் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளப்போவதில்லை என்று உறுதி கூறுகிறேன்.

என்று, மின்சார சப்ளை கம்பெனிகள் மசோதா பற்றிய விவாதத்தின்போது, சென்னை அசெம்பிளியில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

சர்க்கார் பொது ஸ்தாபனங்களை தேசியமயமாக்கவேண்டுமென்று யாராவது நினைத்துக்கொண்டிருந்தால், அந்த எண்ணத்தை விட்டுவிடவேண்டும் என்று, என் மகைத்தான் அமைச்சரின் பேச்சு அறிவிக்கிறது. "சர்க்கார் எல்லாப் பொதுஸ்தாபனங்களையும் தேசியமயமாக்கப் போவதில்லையெனநான் உறுதி கூறுகிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார் அவர். ஆனால், அதேசமயத்தில் மின்சாரம் மாத்திரம் ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் மக்களுக்கு வசதியளிக்கவல்லது, ஆகையால், அதனைச் சர்க்கார் எடுத்துக்கொண்டது என்று காரணம் காட்டிப் பேசுகிறார் அமைச்சர்.

மக்களுக்கு வசதி செய்யத்தான் வேண்டுமென்றால், மின்சாரவசதி மாத்திரமேதான் முக்கியமானது என்ற முடிவுக்கு எப்படி வந்தாரோ அமைச்சர்! வர்த்தகம், விவசாயம், கல்வி, இவைகளெல்லாம் மக்களுக்கு இன்றியமையாதன அல்லவா? இவற்றை ஏன் தேசியமயமாக்கக்கூடாது? மின்சாரம் ஒன்றுதான் முக்கியமா? அவசியமானது என்று எடுத்துக்கொண்டால் மக்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியனவெல்லாம் அவசியமானவைதான். மக்கள் கஷ்டப்படாமல் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதுதான் அரசியலார் கடன். அத்தகைய கடமையைச் சர்க்கார் சரிவர செய்யவேண்டுமானால், கூடுமானவரையில் பொது ஸ்தாபனங்களைத் தேசிய மாக்குவதே சிறந்த வழி. அவ்வழியை விட்டு வேறு வழி செல்கிறது சென்னை சர்க்கார். செல்வது மட்டுமல்ல; தேசியமயமாக்கும் திருப்பணியில் நாங்கள் ஈடுபட மாட்டோம் என உறுதியும் கூறுகிறது! இப்படிப்பட்ட நாட்டிலே அயல் நாட்டாரின் வெறுப்பாதார ஏகாதிபத்தியம் ஏற்படுமானால் அதில் என்ன ஆச்சரியமிருக்க முடியும்?

———

யானைக்கும் அடி சறுக்கும்!

லண்டன், டிச. 21—

ஆல்ப்ஸ் மலை மீது ஏறி பழக்க முள்ள ஸர் பிலிப் ஹாரால்ட் என்பவர், தன் ஆபீஸ் கூரை மீது ஏறும்போது சறுக்கி 60 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து மாண்டார். நூற்றுக்கணக்கான கூரை மீது ஏறினாராம். —ஏஜென்ஸி.

ராயல் இந்திய விமானப் படை

——

புதிய தளபதி தரும் தகவல்

லண்டன், டிச. 21—

ராயல் இந்திய விமானப்படையின் புது தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள ஐவ்லர் சேம்மன், இன்று ருளோம் விருபரிடம் கூறுகையில், இந்தியாவுக்குச் சேவை செய்ய தான் ஆவலுள்ளவனாக இருப்பதாகத் தெரிவித்தார்.

இப்பதவி இரண்டு ஆண்டு காலத்திற்கு இருக்குமாம். பிரான்சிலிருந்து ஏர்க இவர் கப்பல் மூலம் இந்தியாவுக்குப் புறப்படவிருக்கிறார். இவர் தன்னுடைய பத்தினியை பிரிட்டனிலேயே விட்டுவருவார் என்று தெரிகிறது. இவர் ஏற்கனவே இந்திய ஹைகமிஷனரை சந்தித்து, இந்தியா புறப்படுவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் முடித்துவிட்டார்.

இவர் இந்தியாவுக்கு 1919-லிலும் 1946-லிலும் வந்திருக்கிறார். சென்ற போரில் பிரான்ஸ் மீது இவர் விமானம் சென்றுகொண்டிருக்கையில், அதை எதிரிகள் சுட்டுவிட்டனர். அதிலிருந்து தப்பி, ஒரு ஜெண்டார்மிடம் சிக்கிக் கொண்டார். 1945-ல் இவர் நேசப்படைகளால் மீட்கப்பட்டார்.

———

பிரிட்டனுக்கு இந்தியத் தேயிலை, புகையிலை

லண்டன், டிச. 21—

நவம்பர் மாதத்துடன் முடிந்த 11 மாதங்களில் பிரிட்டன் இந்தியாவிடமிருந்து புகையிலை, தேயிலை, தோல் இவைகளை ஏராளமாக இறக்குமதி செய்திருக்கிறது என்று வர்த்தக போர்டு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது.

சணல், கச்சாபருத்தி, எண்ணெய் வித்து இவைகளை இந்தியாவிடமிருந்து பிரிட்டன் வாங்குவது இந்த 11 மாதங்களால் குறைந்திருக்கிறது.

இயந்திரங்கள், மின்சார சாமான்கள், மோட்டார்கள், ரசாயனப் பொருள்கள் இவைகளை அதிகமாக பிரிட்டன் இந்தியாவுக்கு அனுப்பியிருக்கிறது.

———

ஏஜெண்டுகள் தேவை

❋

இழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை:—

ஆலங்குடி (மதுரை), கரூர், அருப்புக்கோட்டை, காகூர், திருப்பாப்புலியூர், குளூர், செங்கோட்டை, நாமக்கல், சிலக்கோட்டை, அரியலூர், திருவையாறு, பேராவூரணி, திண்டிவனம், பண்ணுருட்டி.

நிர்வாகி: "மாலை மணி" சென்னை.

அருப்புக்கோட்டைக்கு அண்ணாத்துரை வருகை

அருப்புக்கோட்டை தி. மு. க. (நகரக்கிளை) துவக்க விழாக் கூட்டம் 3-1-50ல் நடைபெறும்.

அதுபோது தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். காஞ்சி, கல்யாணசுந்தரம் கோவில்பட்டி ஈ. வே. அ வள்ளிமுத்து ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இனி நடப்பவை

நாகர்கோவில்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் நாகராஜா திடலில் 23-12-49 வெள்ளி மாலை 6 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

அழகப்புரம் (நாஞ்சில்):—இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் பொதுக் கூட்டமொன்று 24-12-49 சனி மாலை 6 மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

புதுவை:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 25-12-49 பிற்பகல் 3 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது கழகத் துவக்க விழா பற்றியும், பொங்கல் விழா பற்றியும் முடிவு செய்யப்படும். எல்லா உறுப்பினர்களும் தவறாது வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

திருச்சி மாவட்ட தி. மு. க. அமைப்புக் கூட்ட அழைப்பு

——

நாளை 25-12-49 பிற்பகல் 10 மணிக்கு எஸ். எஸ். பங்களாவில் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் செயற்குழுத் தேர்தல் நடைபெறும். எனவே ஒவ்வொரு கிளைக் கழகங்களிலிருந்தும் மாவட்ட கழகத்திற்கு இரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தனுப்பவும்.

இதையே அழைப்பாகக்கருதி வரவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
ஜி. பராங்குசம்,
அமைப்பாளர்.

வேண்டுகோள்

——

15-12-49 வியாழன் இரவு தர்மபுரியில் 'அண்ணா'வின் சொற்பொழிவு முடிந்தவுடன், கூட்டத்திலோ வரும் வழியிலோ 3?-?-0 ரூபாய் நோட்டுகளும், நன்கொடை வரவு செலவு புள்ளிவிவரங்களும் கொண்ட ஒரு கவர் தவறிவிட்டது. கட்சிப்பணம் ஆனதால், அருள் கூர்ந்து எடுத்த தோழர்கள் அனுப்பி வைத்தால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். வணக்கம்

த. குட்டியப்பன்
செயலாளர், தி. மு. க. கிளை
தர்மபுரி.

———

'செட்டிநாட்டு ராஜா' தோழர் முத்தையா செட்டியாரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மணவாளராமானுஜமும் டிசம்பர் 20-ந் தேதி யன்று சென்னைப் பிரதமர் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜாவை சர்க்கார் காரியாலயத்தில் கண்டு பேசினார்.

NATIONAL CALL

(நேஷனல் கால்)

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து வெளிவரும் ஆங்கில வார இதழ்

தனிப் பிரதி 0-2-0

ஆண்டு சந்தா 6-0-0

முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை

விலாசம்:— பொறுப்பாளர், நேஷனல் கால், சென்னை 17

———

வெளிவருகிறது!

"தீ" பொங்கல் மலர்

அறிஞர்களின் கருத்தோவியங்கள் —அரசியல் வாதிகளின் அனுபவச் சித்திரங்கள் — கலை வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் உண்மை சம்பவங்கள் — மூவர்ணப் படங்கள் "மலரை" மலர்விக்கின்றன.

இன்றே முன்பணம் அனுப்பி பதிவு செய்துகொள்ளுங்கள்

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு தரப்படும்.

'தீ' அலுவலாளர், 147, பவழக்காரத் தெரு, சென்னை-1.

———

"இமயத்தில் நாம்"

சென்னை, டிச. 17—

சேத்துமாலை ஒற்றைவாடையில் டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்து வரும் "இமயத்தில் நாம்" நாடகத்தின் 25-வது நாள், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் தோழர் நாமக்கல் கவிஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. கே. சண்முகம் தலைவருக்கு நன்றிகூறி வரவேற்று மாலை சூட்டினார். தலைவர் பேசுகையில், தமிழ்நாட்டின் சரித்திர வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட கதைகள் நாடகம், சினிமா ஆகியவற்றில் வருவதில்லையென்றும், வடநாட்டுச் சரித்திரங்களையே பெரும்பாலும் தமிழர்கள் நடிக்கப்பட்டு வருவதாகவும், முதலாவதாக தமிழர்களின் பெருமைக்குரிய வரலாற்று நிகழ்ச்சியை ஆரம்பித்த முன்வந்தது தமிழ் நாடக மேடைக்கே உயர்வளிப்பதாகும், தமிழ் நாட்டில், நாடகக் கலையைப் பயன் படும் முறையில் இத்தகைய பெரிய ஸ்தாபனங்கள் அழிந்து விடாமல் காப்பாற்றுவது சர்க்காரின் கடமையென்றும், ஆந்திர நாடக வளர்ச்சிக்காக சர்க்கார் கமிட்டி ஏற்படுத்தித் திட்டம் போட்டு வேலைசெய்து வருவதைப் போல், தமிழ் நாடக முன்னேற்றத்திற்கும் செய்ய வேண்டுமென்றும், இன்றைய நிலையில் நாடகக் கம்பெனியை நிர்வாகிக்க முடியாமல் டி. கே. எஸ். சகோதரர்கள் இரண்டு மாதங்களில் ஸ்தாபனத்தையே கலைத்துவிடப் போவதாக அறிவித்திருப்பது வருந்தத்தக்கதென்றும், இதுபோன்ற ஸ்தாபனங்களின் மறைவு நாட்டுக்கு நஷ்டம் என்றும் விரிவாகப் பேசினார். கடைசியில் டி. கே. சண்முகம் சபையோருக்கு நன்றிகூறிவிட்டு, 1950 பிப்ரவரி 28-ந் தேதியோடு, தமது நாடகசபை நிறுத்தப்படும் என்பதை அறிவித்தார். ஒ-லி

———

சென்னைக்கு சயாம் அரிசி

——

'பார்க்குன்' என்ற கப்பல் சயாமிலிருந்து 8,167 டன் அரிசியை ஏற்றிக்கொண்டு, டிசம்பர் 17-ந் தேதி கொச்சித் துறைமுகம் வந்தடைந்தது. இதில் 5,245 டன் அரிசி சென்னைக்குக் கிடைக்கும்.

தெ. கி. ஆசியாவில் கம்யூனிஸ்டு எதிர்ப்புக் குழு

சிட்னி, டிச. 21—

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டு எதிர்ப்பு நாடுகள் கோஷ்டி ஒன்றை ஏற்படுத்துவதில் ஆஸ்திரேலிய வெளிநாட்டு மந்திரி ஸ்பெண்டர் பெருமுயற்சி செய்வார் என்று இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

வானொலி

(23-12-49 வெள்ளி-வியாழம்)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எஸ். கனகம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)

பிற்பகல்:

12-30 உயர்தரப் பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 நால்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 லலிதா லட்சுமிநாதன்—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 வி. ஹரிஹர ஐயர்—பாட்டு

இரவு:

7-00 திரைப்பட விமர்சனம்
7-15 தமிழில் செய்திகள்
7-30 நால்வகை (இசைத்தட்டு)
8-00 முடிவு நாடகம்
8-15 எஸ். வித்யா—வீணை
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-30 நேயர் விருப்பம்
10-30 முடிவு

——

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 டி. என். கோமதி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 திருச்சி வாத்ய கோஷ்டி
8-50 காசிவிஸ்வநாதன்-பாட்டு

பிற்பகல்:

12-30 உயர்தரப் பள்ளிகளுக்கு
1-00 கதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 காசிவிஸ்வநாதன்-பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 புல்லாங்குழல் (இ. த.)
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 என். சேஷகிரி சகோதரர்கள்—நாகஸ்வரம்
5-40 சங்கரய்யர்—வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
7-45 விவாதம்: ஜி. வரதராசன்,
8-00 என். சோமசுந்தரம் சகோதரர்கள்—நாகஸ்வரம்
8-30 டி. எஸ். கோமதி—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 வீர காரியம் கவிதை நாடகம்
9-35 இசை வேளை (இ. த.)
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.